நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மேலூர்

முன்னிலை: செல்வி.த.தென்றல் முத்து, எல்.எல்.எம்.,

நீதித்துறை நடுவர், மேலூர்

**2026-**ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் **20-**ஆம் நாள் வியாழக்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.**138/2018**

**CNR.No. TNMD16-000955-2018**

...

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக சார்பு ஆய்வாளர்<br>ஒத்தக்கடை காவல்நிலையம்<br>குற்ற எண்309/2017 |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | : | 1) முனிச்சாமி<br>த/பெ.காக்காச்சி (எ) பழனி,<br>காந்தி நகர், மாங்குளம் அஞ்சல்,<br>கிழக்கு தாலுகா, மதுரை மாவட்டம்.<br><br>2) குமார்,<br>த/பெ.பெரியாம்பிள்ளை,<br>காந்தி நகர், மாங்குளம் அஞ்சல்,<br>கிழக்கு தாலுகா, மதுரை மாவட்டம்.<br><br>3) சரவணன்,<br>த/பெ.போட்டையன்,<br>காந்தி நகர், மாங்குளம் அஞ்சல்,<br>கிழக்கு தாலுகா, மதுரை மாவட்டம்.<br><br>4) ஜோதிமணி,<br>த/பெ.முனியசாமி,<br>காந்தி நகர், மாங்குளம் அஞ்சல்,<br>கிழக்கு தாலுகா, மதுரை மாவட்டம்.<br><br>5) கலைவாணன்,<br>த/பெ.முனியசாமி,<br>காந்தி நகர், மாங்குளம் அஞ்சல்,<br>கிழக்கு தாலுகா, மதுரை மாவட்டம்.<br><br>6) கலைவாணி,<br>க/பெ.முனியசாமி,<br>காந்தி நகர், மாங்குளம் அஞ்சல்,<br>கிழக்கு தாலுகா, மதுரை மாவட்டம். |



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.20 08:13:24 +0530

**(**இந்த வழக்கில் **6-**ம் எதிரியாக குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கதிரேசன் இளவர் என்பதனால் அவரை இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுத்து இளஞ்சிறார் நீதிக்குழுமத்திற்கு அனுப்பப்பட்டுள்ளார்**.)**

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடப்பட்டது | : | எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(பி), 341, 342, 323, 324, 506(2). |
| குற்றம் வனையப்பட்டது | : | 1-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 323, 342, 506(2)-ன்படியும், 2, 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 342, 506(2)-ன்படியும், 4-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 323, 342, 294(பி), 506(2)-ன்படியும், 5-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 324, 294(பி), 506(2)-ன்படியும், 6-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 342, 294(பி), 506(2)-ன்படியும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளன. |
| எதிரிகள் காவலுக்கு உட்படுத்தப்பட்டநாள் | : | A1, A2, A3, A4, A5 & A7 Obtained Anticipatory Bail in Crl.M.P.No.2826 & 2880 of 2017, dated 15.06.2017 as per order of the Principal Session Judge, Madurai. |
| இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | : | 03.07.2018 |
| பல்வகை மனு மற்றும் அதன் முடிவு | : | U/s.70(2) Cr.P.C Warrant Recall in Crl.M.P.No.386 of 2026 = Allowed. |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | : | |

| | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 30.12.2021 | 28.07.2022 |
| PW2 | 30.12.2021 | 28.07.2022 |
| PW3 | 30.12.2021 | 28.07.2022 |
| PW4 | 18.11.2022 | 18.11.2022 |
| PW5 | 18.11.2022 | 18.11.2022 |
| PW6 | 22.01.2025 | 22.01.2025 |
| PW7 | 21.07.2025 | Nil |
| PW8 | 21.05.2026 | 21.05.2026 |

| | | |
|---|---|---|
| குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1) (ஆ)-ன் கீழ் எதிரிகளை விசாரித்த நாள் | : | 03.06.2026 |



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.20 08:13:29 +0530

| | | |
|---|---|---|
| தலைமறைவான எதிரியின் விபரம் மற்றும் ஆஜர் செய்யப்பட்ட விபரம் | : | A2 & A3: 30.09.2025 to 24.03.2026 |
| மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை மற்றும் அதன் முடிவு விபரம் | : | Nil |
| தீர்மானம் | : | 1-ம் எதிரி இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 323, 342, 506(2)-ன்படியும், 2, 3 எதிரிகள் இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 342, 506(2)-ன்படியும், 4-ம் எதிரி இ.த.ச பிரிவுகள் 147, 323, 342, 294(பி), 506(2)-ன்படியும், 7-ம் எதிரி இ.த.ச பிரிவுகள் 147, 342, 294(பி), 506(2)-ன்படியும் குற்றவாளிகள் இல்லை என்றும், 5-ம் எதிரி இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 506(2)-ன் கீழ் குற்றவாளி இல்லை என்றும், 5-ம் எதிரி இ.த.ச பிரிவு 324-ன் கீழ் குற்றவாளி என்றும் தீர்மானம். |
| தீர்ப்பு | : | முடிவாக, 1-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 323, 342, 506(2)-ன்படியும், 2, 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 342, 506(2)-ன்படியும், 4-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 323, 342, 294(பி), 506(2)-ன்படியும், 7-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 342, 294(பி), 506(2)-ன்படியான குற்றச்சாட்டுகளிலிருந்து கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்தும், 5-ம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 506(2)-ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்தும், 5-ம் எதிரி மீது இ.த.ச பிரிவு 324-ன் கீழான குற்றச்சாட்டிற்கு ரூ.1,000/-ம் அபராதம் மட்டும் விதித்து கு.வி.மு.ச பிரிவு 248(2)-ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. இந்த வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை. அதனால் அது பற்றி உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை. மேலும் எதிரிகள் கு.வி.மு.ச பிரிவு 437(A)-ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும். |



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.20 08:13:34 +0530

இவ்வழக்கானது கடந்த 09.07.2018-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 20.08.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், 1, 2, 3, 4, 5 மற்றும் 7-ம் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பூமிநாதன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை :-</u>

1-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 323, 342, 506(2)-ன்படியும், 2, 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 342, 506(2)-ன்படியும், 4-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 323, 342, 294(பி), 506(2)-ன்படியும், 5-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 324, 294(பி), 506(2)-ன்படியும், 7-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 342, 294(பி), 506(2)-ன்படியும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளன.

**1)** <u>குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்</u> **:**

இவ்வழக்கின் வாதி மனோகரன் என்பவர் கட்டக்குடும்பாறை அரிட்டாபட்டி, மேலூர் தாலுகா, மதுரை மாவட்டத்தில் குடியிருந்து வந்துள்ளார். இவ்வழக்கின் வாதியின் தங்கை பாப்பு என்பவர் ஒத்தக்கடை அருகில் உள்ள மாங்குளம் காந்தி நகரில் குடியிருந்து வந்துள்ளார். இந்நிலையில் கடந்த 02.06.2017-ம் தேதி காலை 8.00 மணிக்கு வாதியிடம் வாதியின் தங்கை பாப்பு போன் செய்து தனது வீட்டிற்கு அருகில் குடியிருக்கும் எதிரிகள் பொது குழாயில் தண்ணீர் பிடிக்க விடாமல் தகராறு செய்கிறார்கள் என கூறியுள்ளார்கள். வாதியும், வாதியின் சித்தப்பா மகன் குமார் என்பவரும் இரவு 7 மணிக்கு வாதியும், தங்கை ஊரான மாங்குளம் காந்திநகர், பள்ளிக்கூடம் அருகில் பொது குழாய் அருகில் உள்ள காலி இடத்தில் வைத்து 1, 4 எதிரிகளிடம் ஏன் என் தங்கச்சி பாப்புவை குழாயில் தண்ணீர் பிடிக்க விடமாட்டறீங்க என்று கேட்டுக்கொண்டிருந்தபோது மேற்படி எதிரிகள் அனைவரும் கூட்டமாக கூடி நாங்கள் அப்படி தான் செய்வோம் நீங்க ஒரு வீடு, இந்த ஊரே எங்க ஆளுக என்று சொல்லி தேவிடியா மகன்களா நீங்க என்னடா வந்து கேட்பது என்று அசிங்கமாக பேசி கையால் மாறி மாறி அடித்துள்ளார்கள். வாதியும், வாதியுடன் வந்த குமாரும் அடி தாங்காமல் ஓட முயன்றபோது இருவரையும் மறித்து இவர்களை கொன்றால் தான் ஊரைவிட்டு பயந்து காலி செய்வார்கள் என சொல்லி 1, 2, 3, 4, 7 எதிரிகள் வாதியையும், குமாரையும் பிடித்து கொள்ள 5, 6 எதிரிகள்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.20 08:13:42 +0530

இருவரும் வீட்டிற்கு சென்று ஆளுக்கொரு கத்தியை எடுத்து இத்தோடு செத்தீங்கடா என சொல்லி 6-ம் எதிரி கதிரேசன், குமாரை கையில் வைத்திருந்த கத்தியால் வலது கையின் தோள்பட்டைக்கு கீழ் குத்தியுள்ளார். எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து வாதியையும், குமாரையும் கொன்று புதைத்து விடுவோம் என மிரட்டிய குற்ற செயல் புரிந்துள்ளார்கள் என்று ஒத்தக்கடை காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** இந்த வழக்கில் 6-ம் எதிரியாக குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கதிரேசன் இளவர் என்பதனால் அவரை இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுத்து இளஞ்சிறார் நீதிக்குழுமத்திற்கு அனுப்பப்பட்டுள்ளார்.

**3)** இவ்வழக்கு ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.138/2028-ஆக இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கின் எதிரிகள் அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழ் எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கி, போதிய அவகாசம் கொடுத்து, 1-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 323, 342, 506(2)-ன்படியும், 2, 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 342, 506(2)-ன்படியும், 4-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 323, 342, 294(பி), 506(2)-ன்படியும், 5-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 324, 294(பி), 506(2)-ன்படியும், 7-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 342, 294(பி), 506(2)-ன்படியும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு போதிய முகாந்திரம் இருந்ததால் 28.03.2019 அன்று எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து விளக்கி கேட்டபோது எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்துள்ளார்கள். எனவே வழக்கு அரசு தரப்பு சாட்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

**4)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை. வழக்கு விசாரணையின் போது, அ.சா.1-ன் மூலம் அ.சா.ஆ.1-ம், அ.சா.4-ன் மூலம் அ.சா.ஆ.2-ம், அ.சா.5-ன் மூலம் அ.சா.ஆ.3-ம், அ.சா.6-ன் மூலம் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5-ம், அ.சா.7-ன் மூலம் அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.20 08:13:51 +0530

**5)** <u>அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம்</u> **:-**

**5.1)** அ.சா.1 மனோகரன் தனது சாட்சியத்தில் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், கடந்த 2017-ம் வருடம் ஒருநாள் காலை 7 மணியளவில் தன் தங்கை பாப்பு பொதுக்குழாயில் தண்ணீர் பிடிக்கச்சென்றபோது எதிரிகள் அனைவரும் தண்ணீர் பிடிக்கவிடாமல் குடத்தை பறித்து எறிந்து அவதூறாக பேசியதாக தன் தங்கை தன்னிடம் சொன்னார் என்றும், தானும் குமாரும் மாலை 7 மணிக்கு முனிச்சாமி மற்றும் அவரது மனைவியிடம் ஏன் தண்ணீர் பிடிக்கவிடவில்லை என்று கேட்டதற்கு தேவிடியா மகனே ஏன் இங்கு வந்து தண்ணீர் பிடிக்கிறீர்கள் எங்கள் இடத்தில் இருக்கிற பொதுக்குழாயில் நீங்கள் பிடிக்கக்கூடாது என்றும், சொல்லி எதிரிகள் 7 பேரும் சேர்ந்து தங்களை கையால் அடித்தார்கள் என்றும், பின்னர் முனிச்சாமி, அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் 5 பேரும் சேர்ந்து தங்கள் இருவரையும் படித்துக்கொள்ள கதிரேசன் கத்தியால் தனது இடதுகை தோள்பட்டைக்க கீழே குத்தி இரத்தக்காயப்படுத்தினார் என்றும், கலைவாணன் கத்தியால் குமாரின் கையில் குத்தி இரத்தக்காயப்படுத்தினார் என்றும், மோகனும் அருகிலிருந்தவர்களும் தங்களை விலக்கிவிட்டனர் என்றும், அப்போது எதிரிகள் தங்களை ஊரைவிட்டு போகாவிட்டால் கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள் என்றும், பின்னர் தாங்கள் மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார்கள் என்றும், மருத்துவமனையில் தான் சிகிச்சையிலிருந்தபோது தன்னிடம் போலீசார் விசாரித்து எழுதி படித்துக்காண்பித்து தன்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், தான் மருத்துவமனையில் ஒருவார காலம் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5.2)** அ.சா.2 குமார் தனது சாட்சியத்தில் அ.சா.1 தன் அண்ணன் என்றும், எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 2017-ம் வருடம் ஒருநாள் காலை 7 மணியளவில் தன் அக்கா பாப்பு பொதுக்குழாயில் தண்ணீர் பிடிக்கச்சென்றபோது எதிரிகள் அனைவரும் தண்ணீர் பிடிக்கவிடாமல் குடத்தை பறித்து எறிந்து அவதூறாக பேசியதாக தன் அக்கா தன்னிடம் சொன்னார் என்றும், தானும் அ.சா.1-ம் மாலை 7 மணிக்கு முனிச்சாமியின் மகனிடம் சென்று கேட்டதற்கு முனிச்சாமி மற்றும் அவரது மகன்கள் 3 பேரும் சேர்ந்து தாங்கள் அப்படித்தான் பேசுவோம் இங்கு நீங்கள் ஒத்த குடியாக இருக்கிறீர்கள் ஊரே எங்களுடையது தான் என்றும், மற்ற எதிரிகள் தன்னை பிடித்துக்கொள்ள கலைவாணன் கத்தியால் தனது வலதுகை



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY Date: 2026.08.20 08:13:56 +0530

தோள்பட்டைக்குகீழ் குத்தி இரத்தக்காயமானது என்றும், முனிச்சாமியின் கடைசி மகன் அ.சா.1-ஐ கத்தியால் தனது இடதுகை தோள்பட்டைக்குகீழே குத்தி இரத்தக்காயப்படுத்தினார் என்றும், அருகிலிருந்த நபர்கள் விலக்கிவிட்டார்கள் என்றும், அப்போது எதிரிகள் இதற்குமேல் பிரச்சனை செய்தால் உங்களை கொன்று புதைத்துவிடுவோம் என்று மிரட்டினார்கள் என்றும், பின்னர் தாங்கள் மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார்கள் என்றும், தான் மருத்துவமனையில் ஒருவார காலம் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5.3)** அ.சா.3 மோகன் தனது சாட்சியத்தில் அ.சா.1 தன் மைத்துனர் என்றும், அ.சா.1-ன் தங்கை பாப்பு தன் மனைவி என்றும், எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், கடந்த 2017-ம் வருடம் ஒருநாள் காலை 8 முதல் 9 மணியளவில் தன் மனைவி பாப்பு பொதுக்குழாயில் தண்ணீர் பிடிக்கச்சென்றபோது எதிரிகள் அனைவரும் தண்ணீர் பிடிக்கவிடாமல் குடத்தை பறித்து எறிந்து அவதூறாக பேசியதாக தன் மனைவி மாவுலி உட்பட ஊர் பொதுமக்களிடம் சொல்லியுள்ளார் என்றும், பின்னர் அன்னு மாலை தான் 5.30 மணியளவில் வீட்டிற்கு வந்தபோது தன் மனைவி தன்னிடம் சொன்னார் என்றும், பின்னர் அ.சா.1-ம், அ.சா.2-ம் மாலை 7 மணிக்கு எதிரிகளிடம் சென்று ஏன் தன் தங்கையை இவ்வாறு செய்தீர்கள் என்று கேட்டபோது எதிரிகள் 7 பேரும் சேர்ந்து அ.சா.1 மற்றும் அ.சா.2-ஐ கம்பை வைத்து அடித்துக்கொண்டிருந்தார்கள் என்றும், தான் பார்த்தபோது கலைவாணன், குமார், சரவணன், கதிரேசன் ஆகியோர்கள் ஆளுக்கொரு கம்பியுடன் இருந்தார்கள் என்றும், முனிச்சாமி அ.சா.1-ஐ பிடித்துக்கொண்டார் என்றும், கலைவாணியும், ஜோதிமணியும் அ.சா.2-ஐ படித்துக்கொள்ள கலைவாணன் கத்தியை வைத்து குமாரை வலதுகை தோள்பட்டைக்குகீழ் குத்திவிட்டார் என்றும், அ.சா.2-ஐ கதிரேசன் கத்தியை வைத்து இடது தோள்பட்டைக்குகீழ் குத்தி இரத்தக்காயப்படுத்தினார் என்றும், தாங்கள் விலக்கிவிட்டார்கள் என்றும், எதிரிகள் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள் என்றும், அ.சா.1 மற்றும் அ.சா.2 மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5.4)** அ.சா.4 கருப்பசாமி தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் சாட்சியாக போடப்பட்டுள்ள கையொப்பங்களில் 1-வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், தன்னுடன் சேர்ந்து யார் கையொப்பம் செய்தார் என்று தனக்கு தெரியாது என்றும், மேற்படி கையொப்பத்தை சுமார் இரண்டரை வருடத்திற்கு முன்பு தங்கள் ஊருக்கு



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.20 08:14:01 +0530

முன்னால் உள்ள பாறையில் வைத்து ஒத்தக்கடை காவல்நிலையத்திலிருந்த சார்பு ஆய்வாளரிடம் கையொப்பம் செய்தார் என்றும், தன்னிடம் வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை என்றும், இவ்வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், எதற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5.5)** அ.சா.5 இளையராஜா தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.3 பார்வை மகஜரில் சாட்சியாக போடப்பட்டுள்ள கையொப்பங்களில் 2-வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், தன்னுடன் சேர்ந்து யார் கையொப்பம் செய்தார் என்றால் கருப்பசாமி கையொப்பம் செய்தார் என்றும், மேற்படி கையொப்பத்தை சுமார் இரண்டரை வருடத்திற்கு முன்பு தங்கள் ஊருக்கு முன்னால் உள்ள பாறையில் வைத்து ஒத்தக்கடை காவல்நிலையத்திலிருந்த சார்பு ஆய்வாளரிடம் கையொப்பம் செய்தார் என்றும், தன்னிடம் வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை என்றும், இவ்வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், எதற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன் முன்னிலையில் வரைபடமோ, மகஜரோ தயார் செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5.6)** அ.சா.6 சுகுணா தனது சாட்சியத்தில் நான் கடந்த 02.06.2017ம் மேலூர் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியில் இருந்தபோது இரவு 10.30 மணியளவில் 38 வயது மதிக்கதக்க மனோகரன் என்பவர் தெரிந்த நபர்களால் தாக்கப்பட்டதாக கூறி இடது முழங்கைக்கு மேல் வெட்டுக்காயமும், உடம்பு முழுவதும் ஊமைக்காயத்துடன் சிகிச்சைக்காக வந்தவரை பரிசோதித்து தக்க முதலுதவி செய்து அவரை உள்நோயாளியாக அனுமதி;த்து சிகிச்சை அளித்தார் என்றும், அவர் 02.06.2017 முதல் 11.06.2017 வரை உள் நோயாளியாக சிகிச்சை பெற்றார் என்றும், அவருடைய காயம் சாதாரண காயம் என்று அ.சா.ஆ.4 சான்று வழங்கினார் என்றும், அன்றையதினமே இரவு 10.20 மணியளவில் 27 வயது மதிக்கதக்க குமார் என்பவர் தெரிந்த நபர்களால் தாக்கப்பட்டதாக கூறி வலது முழங்கைக்கு மேல் வெட்டுக்காயமும், இடது முழங்கை மற்றும் பின் முதுகில் பல்வேறு சிராய்ப்பு காயத்தோடும் சிகிச்சைக்காக வந்தவரை பரிசோதித்து தக்க முதலுதவி செய்து அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தார் என்றும், அவர் 02.06.2017 முதல் 11.06.2017 வரை உள் நோயாளியாக சிகிச்சை பெற்றார் என்றும், அவருடைய காயம் சாதாரண காயம் என்று அ.சா.ஆ.5 சான்று வழங்கினார் என்றும், பொதுவாக மேற்படி காயம்பட்ட நபரை பிடித்து கீழே தள்ளிவிட்டாலோ, கொடுமையான ஆயுதங்களினால் தாக்கினாலோ, மேற்சொன்ன காயங்கள்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.20 08:14:07 +0530

ஏற்பட வாய்புண்டு என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**5.7)** அ.சா.7 பழனியப்பன் தனது சாட்சியத்தில் கடந்த 03.06.2017-ம் தேதி மேலூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்படி மேலூர் அரசு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த மனோகரன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று 11.00 மணிக்கு குற்ற எண்.309/2017, பிரிவுகள் 147, 148, 294(பி), 341, 323, 324, 506(2) இ.த.ச-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 என்றும், முதல் தகவல் அறிக்கையும், புகாரின் அசலையும் நீதிமன்றத்தில் ஒரு நகலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தார் என்றும், அன்றையதினம் 13.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கருப்பசாமி, இளையராஜா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.7 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.8 மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் மனோகரன், மோகன், குமார் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் கருப்பசாமி, இளையராஜாளை ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், இந்நிலையில் வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் ஜெயலட்சுமியின் பார்வைக்கு வைத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5.8)** அ.சா.8 ஜெயலெட்சுமி தனது சாட்சியத்தில் கடந்த 14.07.2017-ம் தேதி ஒத்தக்கடை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது குற்ற எண்.309/2017, பிரிவுகள் 147, 148, 294(பி), 341, 342, 323, 324, 506(2) இ.த.ச-ன் கீழ் வழக்கு பதிவு செய்து சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனியப்பன் என்பவர் மேற்படி வழக்கை விசாரணை செய்து தனது பார்வைக்கு வைத்ததை தான் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வாதி மற்றும் பிற சாட்சிகளை விசாரணை செய்து சிறப்பு சார்பு ஆய்வாளரிடம் கூறியதைபோல் தன்னிடமும் வாக்குமூலம் அளித்ததனால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அன்றைய தினமே மேலூர் அரசு மருத்துவமனை சென்று சம்பவத்தில் காயம்பட்ட மனோகர் மற்றும் குமார் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனியப்பனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், வழக்கின் எதிரிகள் மாண்புமிகு மதுரை முதன்மை நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்றதனால் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும், இத்துடன் தனது புலன்விசாரணை முடித்து 1, 2, 3, 4, 7 எதிரிகள் மீது பிரிவுகள் 147, 294(பி), 341, 323, 324, 506(2) இ.த.ச-ன் கீழும், மற்றும் 5, 6



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.20 08:14:12 +0530

எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(பி), 341, 342, 323, 324, 506(2)-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6)** குற்றவியல் விசாரணை சட்டப்பிரிவு **313(1)**(ஆ)**-**ன் கீழான விசாரணை

அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டதற்கு பின்னால் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் விசாரணையிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது 1 முதல் 6 எதிரிகள் பொய் சாட்சியம் என்று அரசு தரப்பு சாட்சிகளை மறுத்துவிட்டார்கள். மேலும் அவர்கள் தரப்பில் சாட்சிகள் உண்டா என வினவியபோது சாட்சிகள் இல்லை என்று சொன்னார்கள். அதனால் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்று சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**7)** அரசு தரப்பு வாதம் பின்வருமாறு**:**

அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரிகள் தான் குற்றம் புரிந்துள்ளார்கள் என்று சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரிகள் மீது உள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், எனவே எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறு எடுத்துரைத்தார்கள்.

**8)** எதிரிகள் தரப்பில் வாதம் பின்வருமாறு**:**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் இல்லை என்றும், எனவே எதிரிகள் மீது உள்ள குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**9)** தீர்வு **:-**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அனைத்து வழக்காவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

**10)** அரசு தரப்பு வழக்குப்படி, இவ்வழக்கின் வாதி மனோகரன் என்பவர் கட்டக்குடும்பாறை அரிட்டாபட்டி, மேலூர் தாலுகா, மதுரை மாவட்டத்தில் குடியிருந்து வந்துள்ளார். இவ்வழக்கின்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.20 08:14:35 +0530

வாதியின் தங்கை பாப்பு என்பவர் ஒத்தக்கடை அருகில் உள்ள மாங்குளம் காந்தி நகரில் குடியிருந்து வந்துள்ளார். இந்நிலையில் கடந்த 02.06.2017-ம் தேதி காலை 8.00 மணிக்கு வாதியிடம் வாதியின் தங்கை பாப்பு போன் செய்து தனது வீட்டிற்கு அருகில் குடியிருக்கும் எதிரகிள் பொது குழாயில் தண்ணீர் பிடிக்க விடாமல் தகராறு செய்கிறார்கள் என கூறியுள்ளார்கள். வாதியும், வாதியின் சித்தப்பா மகன் குமார் என்பவரும் இரவு 7 மணிக்கு வாதியும், தங்கை ஊரான மாங்குளம் காந்திநகர், பள்ளிக்கூடம் அருகில் பொது குழாய் அருகில் உள்ள காலி இடத்தில் வைத்து 1, 4 எதிரிகளிடம் ஏன் என் தங்கச்சி பாப்புவை குழாயில் தண்ணீர் பிடிக்க விடமாட்டறீங்க என்று கேட்டுக்கொண்டிருந்தபோது மேற்படி எதிரிகள் அனைவரும் கூட்டமாக கூடி நாங்கள் அப்படி தான் செய்வோம் நீங்க ஒருவீடு, இந்த ஊரே எங்க ஆளுக என்று சொல்லி தேவிடியா மகன்களா நீங்க என்னடா வந்து கேட்பது என்று அசிங்கமாக பேசி கையால் மாறி மாறி அடித்துள்ளார்கள். வாதியும், வாதியுடன் வந்த குமாரும் அடி தாங்காமல் ஓட முயன்றபோது இருவரையும் மறித்து இவர்களை கொன்றால் தான் ஊரைவிட்டு பயந்து காலி செய்வார்கள் என சொல்லி 1, 2, 3, 4, 6 எதிரிகள் வாதியையும், குமாரையும் பிடித்து கொள்ள 5, 6 எதிரிகள் இருவரும் வீட்டிற்கு சென்று ஆளுக்கொரு கத்தியை எடுத்து இத்தோடு செத்தீங்கடா என சொல்லி 6-ம் எதிரி, குமாரை கையில் வைத்திருந்த கத்தியால் வலது கையின் தோள்பட்டைக்கு கீழ் குத்தியுள்ளார். எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து வாதியையும், குமாரையும் கொன்று புதைத்து விடுவோம் என மிரட்டிய குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**<u>11) இ.த.ச பிரிவுகள் 323, 324</u>**

இவ்வழக்கின் 1 மற்றும் 4-ம் எதிரி அ.சா.1 மனோகரனையும், குமாரையும் கையால் மாறி மாறி அடித்ததாக இ.த.ச பிரிவு 323-ன் கீழும், 5-ம் எதிரி, குமாரை கையில் வைத்திருந்த கத்தியால் வலது கையின் தோள்பட்டையில் குத்தியதாலும், இவ்வழக்கிலிருந்து பிரிக்கப்பட்ட 6-ம் எதிரி கதிரேசன் அ.சா.1-ஐ கத்தியால் இடது முழங்கையில் மேல் குத்தியதாலும் இ.த.ச பிரிவு 324-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

**12)** அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் "தானும் குமாரும் மாலை 7 மணிக்கு முனிச்சாமி மற்றும் அவரது மனைவியிடம் ஏன் தண்ணீர் பிடிக்கவிடவில்லை என்று கேட்டதற்கு தேவிடியா மகனே ஏன் இங்கு வந்து தண்ணீர் பிடிக்கிறீர்கள் எங்கள் இடத்தில் இருக்கிற பொதுக்குழாயில் நீங்கள் பிடிக்கக்கூடாது என்றும், சொல்லி எதிரிகள் 7 பேரும் சேர்ந்து தங்களை கையால் அடித்தார்கள் என்றும், பின்னர் முனிச்சாமி, அவரது மனைவி மற்றும்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.20 08:14:41 +0530

பிள்ளைகள் 5 பேரும் சேர்ந்து தங்கள் இருவரையும் படித்துக்கொள்ள கதிரேசன் கத்தியால் தனது இடதுகை தோள்பட்டைக்க கீழே குத்தி இரத்தக்காயப்படுத்தினார் என்றும், கலைவாணன் கத்தியால் குமாரின் கையில் குத்தி இரத்தக்காயப்படுத்தினார் என்றும், மோகனும் அருகிலிருந்தவர்களும் தங்களை விலக்கிவிட்டனர்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**13)** மேலும் காயம்பட்ட மற்றொரு நபரான அ.சா.2 குமார் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் "தானும் அ.சா.1-ம் மாலை 7 மணிக்கு முனிச்சாமியின் மகனிடம் சென்று கேட்டதற்கு முனிச்சாமி மற்றும் அவரது மகன்கள் 3 பேரும் சேர்ந்து தாங்கள் அப்படித்தான் பேசுவோம் இங்கு நீங்கள் ஒத்த குடியாக இருக்கிறீர்கள் ஊரே எங்களுடையது தான் என்றும், மற்ற எதிரிகள் தன்னை பிடித்துக்கொள்ள கலைவாணன் கத்தியால் தனது வலதுகை தோள்பட்டைக்குகீழ் குத்தி இரத்தக்காயமானது என்றும், முனிச்சாமியின் கடைசி மகன் அ.சா.1-ஐ கத்தியால் தனது இடதுகை தோள்பட்டைக்குகீழே குத்தி இரத்தக்காயப்படுத்தினார் என்றும், அருகிலிருந்த நபர்கள் விலக்கிவிட்டார்கள்". என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**14)** மேற்கூறிய காயம்பட்ட இரண்டு நபர்களும் அவர்களது சாட்சியத்தில் எதிரிகள் அனைவரும் அவர்கள் இருவரையும் பிடித்துக்கொள்ள அ.சா.1-ஐ வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட 6-ம் எதிரி கதிரேசன் கத்தியால் குத்தியதாகவும், அ.சா.2 குமாரை 5-ம் எதிரி கலைவாணன் கத்தியால் குமாரின் வலது தோள்பட்டையில் குத்தியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2-க்கு ஏற்பட்ட காயத்தை குறித்து அவர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவரான அ.சா.6 சுகுணா தனது சாட்சியத்தில் "அன்றையதினமே இரவு 10.20 மணியளவில் 27 வயது மதிக்கதக்க குமார் என்பவர் தெரிந்த நபர்களால் தாக்கப்பட்டதாக கூறி வலது முழங்கைக்கு மேல் வெட்டுக்காயமும், இடது முழங்கை மற்றும் பின் முதுகில் பல்வேறு சிராய்ப்பு காயத்தோடும் சிகிச்சைக்காக வந்தவரை பரிசோதித்து தக்க முதலுதவி செய்து அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தார் என்றும், அவர் 02.06.2017 முதல் 11.06.2017 வரை உள் நோயாளியாக சிகிச்சை பெற்றார் என்றும், அவருடைய காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினார்". என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவர் வழங்கிய காயச்சான்றிதழான அ.சா.ஆ.5-ஐ கவனமாக பரிசீலனை செய்ததில் குமாரை எதிரிகள் தாக்கியதில் அவருக்கு "Cut injury, 12 x 0.5x0.3 cm" இருந்ததாக தெரியவருகிறது. மேலும் காயம்பட்ட நபரும், அரசு



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.20 08:14:46 +0530

வழக்கிற்கு ஆதரவாக தன்னை 5-ம் எதிரி கலைவாணன் கத்தியால் தோள்பட்டையில் குத்தியதாக அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார். மேலும் காயம்பட்ட மற்றொரு சாட்சியான அ.சா.1 தனது சாட்சியத்தில், கதிரேசன் குமாரை கத்தியால் தோள்பட்டையில் குத்தியதாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே அரசு தரப்பில் 5-ம் எதிரி கலைவாணன் அ.சா.2-ஐ கத்தியால் தோள்பட்டையில் குத்தி சாதாரண காயம் ஏற்படுத்தியதால் இ.த.ச பிரிவு 324-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது.

**15)** ஆனால் அரசு தரப்பில் 1 மற்றும் 4-ம் எதிரி அ.சா.1 மற்றும் அ.சா.2-ஐயும் அடித்து காயம் ஏற்படுத்தியதாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை. எனவே மற்ற எதிரிகள் இ.த.ச பிரிவு 323, 324-ன் கீழ் குற்றவாளிகள் என்று சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**16) இ.த.ச பிரிவுகள் 147, 342**

**16.1)** எதிரிகள் அனைவரும் சட்டவிரோதமாக ஒன்றுகூடி அ.சா.1 மற்றும் அ.சா.2-ஐ தாக்கி அவர்களை அங்கிருந்து செல்லவிடாமல் தடுத்து வைத்திருந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. ஆனால் இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் அ.சா.2-ஐ தவிர மற்ற சாட்சிகள் எதிரிகள் சம்பவ இடத்தில் சட்டவிரோதமாக ஒன்று கூடி அ.சா.1 மற்றும் அ.சா.2-ஐ தாக்கினார்கள் என்று சாட்சியம் அளிக்கவில்லை.

**16.2)** அ.சா.3 தனது சாட்சியத்தில் "பின்னர் அ.சா.1-ம், அ.சா.2-ம் மாலை 7 மணிக்கு எதிரிகளிடம் சென்று ஏன் தன் தங்கையை இவ்வாறு செய்தீர்கள் என்று கேட்டபோது எதிரிகள் 7 பேரும் சேர்ந்து அ.சா.1 மற்றும் அ.சா.2-ஐ கம்பை வைத்து அடித்துக்கொண்டிருந்தார்கள் என்றும், தான் பார்த்தபோது கலைவாணன், குமார், சரவணன், கதிரேசன் ஆகியோர்கள் ஆளுக்கொரு கம்பியுடன் இருந்தார்கள் என்றும், முனிச்சாமி அ.சா.1-ஐ பிடித்துக்கொண்டார் என்றும், கலைவாணியும், ஜோதிமணியும் அ.சா.2-ஐ படித்துக்கொள்ள கலைவாணன் கத்தியை வைத்து குமாரை வலதுகை தோள்பட்டைக்குகீழ் குத்திவிட்டார் என்றும், அ.சா.2-ஐ கதிரேசன் கத்தியை வைத்து இடது தோள்பட்டைக்குகீழ் குத்தி இரத்தக்காயப்படுத்தினார் என்றும், தாங்கள் விலக்கிவிட்டார்கள்". என்று சாட்சியம் அளித்துள்ளார். அவர் எந்தெந்த எதிரிகள் சட்டவிரோதமாக ஒன்றுகூடி அ.சா.1 மற்றும் அ.சா.2-ஐ தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. எனவே எதிரிகள் அனைவரும் சட்டவிரோதமாக ஒன்று கூடி, அ.சா.1 மற்றும் அ.சா.2-ஐ தடுத்து நிறுத்தியதாக அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.20 08:14:52 +0530

நிரூபிக்கவில்லை. எனவே எதிரிகள் அனைவரும் இ.த.ச பிரிவுகள் 147 மற்றும் 342-ன் கீழ் சட்டவிரோதமாக ஒன்று கூடி, அ.சா.1 மற்றும் அ.சா.2-ஐ தடுத்து நிறுத்தி வைத்தார்கள் என்று சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**17) இ.த.ச பிரிவு 294(பி)**

**17.1)** பொதுவாக ஒரு நபருக்கு எதிராக இதச பிரிவு 294(பி) குற்றச்சாட்டு நிருபிக்கப்படவேண்டுமென்றால், அந்த நபர் பயன்படுத்திய ஆபாசமான வார்த்தைகள் மற்றவர்களுக்கு ஒழுக்ககேடான தாக்கங்களுக்கு உட்பட்டிருக்கவேண்டும் என்றும், அவருக்கு அருவருப்பான எரிச்சலூட்டும் வகையில் அந்த சொற்கள் இருந்திருக்கவேண்டும் என்றும் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டிருக்கவேண்டும். மேலும், **P.T.Chacko Vs Nainan 1967 KLT 799** என்ற வழக்கில் உச்சநீதிமன்றமானது கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

*"To prove the offence under section 294 of IPC mere utternance of obscene words are not suffient but there must be a further proof to establish that it was to b e annonyance of others, it is lacking in this case. No one has spokent about the obscene words, they felt annoyed and in the absence of legal evidence to show that the words uttered by the appellant accused annoyed others, it can not be said the ingriedients of offence u/s.294(b) of IPC is made out".*

**17.2)** மேற்படி மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் காணும்போது, இந்த வழக்கில் அ.சா.1 மற்றும் அ.சா.2-ஐ எதிரிகள் அசிங்கமாக பேசி அது மற்றவர்களுக்கு எரிச்சலூட்டும் வகையிலும், அருவருக்கத்தக்க வகையிலும் இருந்ததாக இந்த வழக்கின் புகார் மனு உட்பட எந்த சாட்சியத்திலும் காணப்படவில்லை. மேலும், இ.த.ச.பிரிவு 294(b)-ன் படி, எதிரிகள் பொது இடத்தில் வைத்து ஆபாச சொற்களால் அ.சா.1 மற்றும் அ.சா.2-ஐ வசைபாடியிருக்கவேண்டும்.

**18) இ.த.ச பிரிவு 506(2)**

**18.1)** மேலும், எதிரிகளுக்கு எதிரான இ.த.ச. பிரிவு 506(2)-ன் கீழான குற்றச்சாட்டை காணும்போது, சம்பவத்தின்போது எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2-ஐ கொன்றுவிடுவதாக மிரட்டியதாக அரசு தரப்பு வழக்காகும்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.20 08:15:01 +0530

**18.2)** மேலும், **Manik Taneja Vs State of Karnataka 2015 (7) SCC 423** என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றமானது குற்றவியல் மிரட்டல் என்ற பதத்திற்கு கீழ்க்கண்டவாறு பொருள் கண்டுள்ளது.

*" The threat must be with intention to cause alaram to the complainant to cause that person to do or omit to do any work mere expression of any words without any intention to cause alaram would not be sufficient to bring in the applicaition of section 503 of IPC "*

**18.3)** இந்த வழக்கில் எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2-ஐ கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்ற வாசகத்தை தவிர அந்த கொலை மிரட்டல் அ.சா.1 மற்றும் அ.சா.2-க்கு எச்சரிக்கையுடன் கூடிய அச்சத்தை ஏற்படுத்தும் நோக்கில் இருந்தது என்றும், அதன் மூலம் அ.சா.1 மற்றும் அ.சா.2 மிகுந்த அச்சமடைந்து அவர் செய்யக்கூடிய வேலையை செய்ய தவிர்த்துவிட்டதாக எந்த சாட்சியமும் காணப்படவில்லை. எனவே, எதிரிகள் மிரட்டியதாக சொல்லப்படுவதற்கு பயந்து அ.சா.1 மற்றும் அ.சா.2 எங்கும் செல்லாமல் அச்சமுற்று இருந்தாக புலப்படவில்லை என்பதால் எதிரிகளுக்கு எதிரான இ.த.ச. பிரிவு 506(2)-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**19)** எனவே இவ்வழக்கில் அரசு தரப்பில் 5-ம் எதிரி அ.சா.2-ஐ அடித்து சாதாரண காயம் ஏற்படுத்தினார் என்று சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், 1, 2, 3, 4, 7 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை 1, 2, 3, 4, 7 எதிரிகளுக்கு அளித்து, 1, 2, 3, 4, 7 எதிரிகளை விடுதலை செய்வது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று தீர்ப்பளித்தும், 5-ம் எதிரி கலைவாணன் இ.த.ச பிரிவு 324-ன் கீழ் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**20)** முடிவாக, 1-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 323, 342, 506(2)-ன்படியும், 2, 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 342, 506(2)-ன்படியும், 4-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 323, 342, 294(பி), 506(2)-ன்படியும், 7-ம் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 147, 342, 294(பி), 506(2)-ன்படியான குற்றச்சாட்டுகளிலிருந்து கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்தும், 5-ம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 147, 294(பி), 506(2)-ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்தும், 5-ம் எதிரி மீது இ.த.ச பிரிவு 324-ன் கீழான குற்றச்சாட்டிற்கு ஒரு வருட காலம் சாதாரண சிறை



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.20 08:15:07 +0530

தண்டனை விதித்தும், ரூ.1,000/-ம் அபராதம் விதித்தும், அபராதம் கட்ட தவறினால் இரண்டு மாதம் சாதாரண சிறை தண்டனை விதித்து கு.வி.மு.ச பிரிவு 248(2)-ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

**21)** 5-ம் எதிரியிடம் அவருக்குரிய தண்டனையை பற்றி விளக்கிக்கூறி வினவியபோது 5-ம் எதிரி இதுபோன்ற குற்றங்கள் எதுவும் இதற்கு முன்னர் செய்யவில்லை என்றும், அவர் சிறு வயதில் இருந்தபோது இச்சம்பவம் நடந்தது என்றும், தான் தற்போது திருமணம் ஆகி இரு குழந்தைகளுடன் வாழ்ந்து வருவதாகவும், தான் வாழ்வாதாரத்திற்கு கூலி வேலை செய்து வருவதாகவும், தன்னை தவிர தனது குடும்பத்தில் வருமானம் ஈட்டும் நபர் யாரும் இல்லை என்றும், தான் இனிவரும் காலங்களில் இதுபோன்ற குற்றச்சம்பவத்தில் ஈடுபடமாட்டேன் என்று கூறியுள்ளார். மேலும் ஒத்தக்கடை காவல்நிலைய காவலரிடம் விசாரித்தபோது 5-ம் எதிரி மீது வேறு எந்த வழக்கும் இல்லையென தெரியவந்ததால் அவருக்கு இந்நீதிமன்றம் திருந்தி வாழ ஒரு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு 5-ம் எதிரி இனிமேல் இதுபோன்ற குற்றச்சம்பவத்தில் ஈடுபடக்கூடாது என்று கு.வி.மு.ச பிரிவு 360-ன் கீழ் கண்டித்து அவருக்கு விதித்த சிறை தண்டனையை குறைத்து ரூ.1,000/-ம் மட்டும் அபராதம் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிப்பதே நீதியின் பால் சரியானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதி தீர்ப்பளிக்கிறது. எனவே 5-ம் எதிரி ரூ.1,000/-ம் மட்டும் அபராதம் செலுத்தவேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**22)** இந்த வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை. அதனால் அது பற்றி உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை.

**23)** மேலும் 1, 2, 3, 4, 5 மற்றும் 7-ம் எதிரிகள் கு.வி.மு.ச பிரிவு 437(A)-ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026- ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.20 08:15:12 +0530

நீதித்துறை நடுவர்,
மேலூர்.

இணைப்பு

அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் :-

| வரிசை எண் | விசாரிக்கப்பட்ட தேதி | சாட்சிகளின் பெயர்கள் | விளக்கம்/சாட்சியின் தன்மை |
|---|---|---|---|
| அ.சா.1 | 30.12.2021 | மனோகரன் | புகார்தாரர் |
| அ.சா.2 | 30.12.2021 | குமார் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | 30.12.2021 | மோகன் | சம்பவ சாட்சி |
| அ.சா.4 | 18.11.2022 | கருப்பசாமி | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.5 | 18.11.2022 | இளையராஜா | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.6 | 22.01.2025 | சுகுணா | மருத்துவர் |
| அ.சா.7 | 21.07.2025 | பழனியப்பன் | முதல்நிலை புலன்விசாரணை அதிகாரி |
| அ.சா.8 | 21.05.2026 | ஜெயலெட்சுமி | புலன்விசாரணை அதிகாரி |

அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள் :-

| வரிசை எண் | நிரூபிக்கப்பட்டது/ சான்றளிக்கப்பட்டது | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | அ.சா.1 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | அ.சா.4 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.4-ன் 1-வது கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | அ.சா.5 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.5-ன் 2-வது கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | அ.சா.6 | மனோகரன் என்பவரின் காயச்சான்று |
| அ.சா.ஆ.5 | அ.சா.6 | குமார் என்பவரின் காயச்சான்று |
| அ.சா.ஆ.6 | அ.சா.7 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.7 | அ.சா.7 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.8 | அ.சா.7 | மாதிரி வரைபடம் |

அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்**:-** இல்லை

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.20 08:15:17 +0530

**1** முதல் **6** எதிரிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் **-** இல்லை

குறியீடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்**:** இல்லை

குறிப்பு

1) வழக்கு விசாரணைகாலத்தில், 1, 2, 3, 4, 5 மற்றும் 7-ம் எதிரிகள் நீதிமன்ற பிணையிலிருந்துள்ளார்கள்.

2) எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது

4) தீர்ப்பின் நகல், மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

5) 5-ம் எதிரிக்கு தீர்ப்பின் நகல் வழங்கப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.20 08:15:25 +0530